<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குன்னம்</u>

<u>அசல் வழக்கு எண். 43/2021</u>

<u>C/W 44/2021</u>

2023- ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 31– ஆம் நாள் செவ்வாய்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியாகிய PW1 - வது நபரின் வாக்குமூலம் ( 1969- ஆம் ஆண்டின் 54 வது விதியில் 9- வது பிரிவின் ஏற்பாட்டின் படி ) திரு.கோ.லோகநாதன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சின்னப்பொண்ணு | தொழில் | : | விவசாயம் |
| தகப்பனார்/ கணவர் பெயர் | : | ஒப்பிலா மணி | வட்டம் | : | குன்னம் |
| கிராமம் | : | நன்னை | சமயம் | : | – |
| சாதி | : | – | வயது | : | 55/2023 |

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u> :-

தாவா சொத்தான அரசு புறம்போக்கு நிலத்திற்கு தற்போது தண்ட தீர்வை செலுத்தியதற்கான ரசீது எதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். நான் அது போல் எந்தவிதமான தண்ட தீர்வு ரசீதும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. RDO -விடம் நான் மனு கொடுத்த பிறகு எப்போது மேற்படி இடம் வண்டி பாதை என்று என்னிடம் தெரிவித்தார்கள் என்றால் வண்டி பாதை என்று சொன்னார்கள் ஆனால் எப்போது சொன்னார்கள் என்று எனக்கு ஞாபகம் இல்லை. பின்னர் சாட்சி அரசு துறையை சார்ந்தவர்கள் என்னிடம் மேற்படி இடம் வண்டி பாதை என்று சொல்லவில்லை. ராமசாமி தான் என்னிடம் இது அரசு புறம்போக்காக உள்ள நிலம் வண்டி பாதை என்று என்னிடம் தெரிவித்தார் என மாற்றி சாட்சியம் அளிக்கிறார். நான் RDO-விடம் சென்று கேட்ட போது அவர் மேற்படி இடம் அரசு புறம்போக்கு என்றும்,

DMC Kunnam

வண்டிபாதையாக உள்ளது என்றும் இது தொடர்பாக நீதிமன்றத்தில் சென்று வழக்கு போட்டுக் கொள்ளுமாறு என்னிடம் சொன்னார்கள்.

2) A அட்டவணை சொத்து மட்டும் தான் எங்களுக்கு சொந்தம் என்றாலும், B அட்டவணை சொத்து அரசு புறம்போக்கு என்பதால் அதில் எங்களுக்கு எந்த உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. RDO அலுவலகத்தில் இருந்து எங்களை ஊருக்குள் வந்து விசாரித்தார்கள் என்றாலும் நான் வழக்கிற்காக எங்களை விசாரிக்கவில்லை என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எனவே நான் தாக்கல் செய்த வழக்கு தள்ளுபடி ஆக வேண்டுமென்றாலும், பிரதிவாதி போட்ட வழக்கு தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

Taken Court by in Open Court read and to the witness and admitted by the witnesses to be correct.

District Munsif - Cum - Judicial Magistrate,
Kunnam.

DM Cum JM Kunnam